# கோரிக்கை எண். 33

## சட்டத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2019–2020

# கோரிக்கை எண். 33

# சட்டத்துறை

## 2019–2020 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு



| வரிசை எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1–5 |
| 2. | சட்டக் கல்வி | 5–14 |
| 3. | தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் | 14–19 |
| 4. | தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம் | 19–25 |
| 5. | மாநில சட்ட ஆணையம் | 25–27 |
| 6. | மாநில (சட்ட) ஆட்சி மொழி ஆணையம் | 27–29 |
| 7. | சான்றுறுதி அலுவலர்கள் | 29–30 |
| 8. | நீடித்த வளர்ச்சி இலக்கு | 30–31 |

## 2019–2020 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு

## கோரிக்கை எண். 33 சட்டத்துறை

### முன்னுரை

சட்டங்களும் சட்டமுறைகளும் நலமான வாழ்க்கைக்கு துணை செய்வதற்கும் மேம்படுத்துவதற்கும் மிகவும் இன்றியமையாதவை ஆகும். நல்ல சட்டமுறை என்பது அனைவருக்கும் ஏற்புடையதாகவும் அனைவரையும் சமமாக நடத்துகின்ற தகைமை உடையதாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான், சமுதாயத்தைச் சட்டத்திற்குக் கீழ்ப்படியச் செய்கின்ற அதிகார உரிமையை அது பெறமுடியும். எந்தச் சட்டம் ஒரு சமுதாயத்தை கட்டாள்கை செய்கின்றதோ அந்தச் சட்டம் தான் அந்தச் சமுதாயத்தின் தேவைகளை நிறைவேற்றுவதாகவும் இருந்து வருகிறது. சட்டத்திற்கே உரிய பணியான சமுதாயத்தின் தேவைகளை நிறைவேற்றுகின்ற தனது பங்கினை அது ஆற்ற வேண்டுமென்றால், அந்தச் சட்டமானது சமுதாயத்தின் எண்ணங்களையும் கோட்பாடுகளையும் பெரிதும் பலப்படுத்துவதாக இருக்க

வேண்டும். அது சமுதாயத்தின் காலவோட்டத்தோடும் இதயத்துடிப்போடும் இணைந்து செயல்படுவதாகவும், அது மக்களின் தேவைகளோடும் விருப்ப விளைவுகளோடும் இயைந்து செயல்படுவதாகவும் அமைதல் வேண்டும். சமுதாயம் மாறி வருகிறபோது சட்டம் மட்டும் மாறாத ஒன்றாக இருந்துவிட முடியாது. காலவோட்டத்தையும் மாநில மக்களின் தேவைகளையும் விருப்ப விளைவுகளையும் கருத்தில் கொண்டு இந்த சட்டமன்றம் சட்டங்களை இயற்றி வருகிறது.

இந்திய அரசமைப்பு நமது நாட்டின் உயர்ந்த சட்டமாக திகழ்கிறது. மாநில சட்டமன்றம், அரசமைப்பின் ஏழாம் இணைப்புப்பட்டியலில் உள்ள மாநிலப் பட்டியலிலும் ஒருங்கியல் பட்டியலிலும் குறித்துரைக்கப்பட்ட பொருள் எதனையும் குறித்து சட்டமியற்றுகிறது. ஆனால் ஒருங்கியல்பட்டியலின் கீழ்வரும் பொருளைப் பொறுத்தவரை, மாநில சட்ட மன்றத்தினால் இயற்றப்படும் சட்டமானது பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட எத்தகைய சட்டத்திற்கும் அல்லது நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கும் முரணாக இருக்குமேயானால் அது குடியரசுத்தலைவரால் இசைவளிக்கப்பட்ட பின்பு சட்டமாகிறது. சட்ட மன்றத்தினால்

நேரடியாக இயற்றப்படும் சட்டமானது, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் முக்கிய கொள்கைகளைப் பிரதிபலிப்பதாகவுள்ளது. சட்டத்தின் செயல்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான தொழில்நுட்ப விவரங்களும், நெறிமுறைகளும் அடங்கிய நடவடிக்கைகளை குறித்துரைக்க நிருவாக அதிகார அமைப்புகளுக்கு ஒப்படைவு செய்யப்படுகிறது. இவை அதிகாரமளிக்கப்பட்ட அதிகார அமைப்புகளால் வகுக்கப்படும் விதிகள் என்று வழங்கப்படும். அவ்வாறு வகுக்கப்படும் விதிகள் அதிகாரமளிக்கப்பட்ட அதிகார அமைப்புகளால் இயற்றப்பட்டு, சட்டத்துறையினால் கூர்ந்தாய்வு செய்யப்படுகின்றன. விதிகள் வகுக்கப்படுகையில், சட்டமன்றத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகார அமைப்புகள் ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்களை மீறாதிருக்கின்றனவா என்பதை உறுதி செய்யும் பொருட்டு, சட்டமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டத்தின் வகைமுறைகளின்படி வெளியிடப்படும் விதிகள் மற்றும் அறிவிக்கைகள் அனைத்தும் சட்டமன்றத்தின் விதிகள் ஆய்வுக்குழுவினால் ஆய்வு செய்யப்படுகின்றது.

அரசின் கொள்கை முடிவைச் சட்டமாக்க வேண்டும் என்று முடிவு செய்யும் பட்சத்தில், சட்டத்துறை, தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து அக்கொள்கை முடிவுகளுக்கு சட்டவடிவமளித்து சட்டமுன்வடிவுகளை உருவாக்குகிறது.

சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவிற்கு ஒப்புதல் அளித்த பின்பு, ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற பின்னர், அது சட்டமாகும் வரையில், சட்டத்துறையின் பணி தொடர்கிறது. சட்டமன்றப் பேரவை ஒத்திவைக்கப்பட்டு, அமர்வில் இல்லாத காலங்களிலும், சட்டமியற்றுவதற்கான அவசரத் தேவை ஏற்படுகிறவிடத்து, அரசமைப்பின் 213–ஆம் உறுப்பின்படி அவசரச் சட்டம் வெளியிடப்படுகிறது. சட்டத்துறையின் பணி, அவசரச் சட்டத்திற்கான முன்வரைவுகளை அதன் நோக்கத்திற்கேற்ப உருவாக்கி அதனை பிரகடனப்படுத்தி வெளியிடும் வரையில் தொடர்கிறது.

மேலும், சட்டத்துறையின் முக்கியப் பணியானது, சட்டப் பேரவைச் செயலகம் உள்ளடங்கலான தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளுக்கும் சட்டப் பிரச்சனை தொடர்பாக ஆலோசனை வழங்குவதாகும்.

மாநில அரசு ஒரு தரப்பினராக உள்ள அனைத்து வழக்குகளிலும், உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், எதிர் உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், அவற்றிற்கான வரைவு மறுமொழிகளும் சட்டத்துறையினால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு அறுதி செய்யப்படுகின்றன. இவை தவிர, மாநில அரசு ஒரு தரப்பினராக உள்ள ஆவணங்கள் அனைத்தையும் சட்டத்துறை கூர்ந்தாய்வு செய்து அறுதி செய்கிறது.

மேலும், பின்வருவன தொடர்பான நிருவாகப் பணிகளையும் சட்டத்துறை செய்து வருகிறது:-

- சட்டக் கல்வி
- தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்
- தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம்
- மாநில சட்ட ஆணையம்
- மாநில (சட்ட) ஆட்சிமொழி ஆணையம்
- சான்றுறுதி அலுவலர்கள்

**சட்டக் கல்வி**

சட்டக் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் சட்டக்கல்வித் துறையானது தமிழ்நாட்டில் **1953**–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இத்துறை

உருவாக்கப்பட்ட பிறகு, தமிழ்நாட்டில் சட்டக் கல்வியின் தரம் அனைத்து வகைகளிலும் முன்னேற்றம் அடைந்துள்ளதோடு, மென்மேலும் முன்னேற்றமடைய, இத்துறை தொடர்ந்து முயன்று வருகிறது.

சென்னை, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி 1891–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி 1974–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1979–80–ஆம் கல்வியாண்டில் திருச்சிராப்பள்ளியில் ஒன்றும், கோயமுத்தூரில் ஒன்றுமாக இரு அரசு சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. 1996–97–ஆம் கல்வியாண்டில் திருநெல்வேலியில் ஒரு அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தால் செங்கல்பட்டில் நடத்தப்பட்டு வந்த சட்டக் கல்லூரி, அரசு சட்டக் கல்லூரியாக டிசம்பர் 2006–இல் அறிவிக்கப்பட்டது. 2008–2009–ஆம் கல்வியாண்டு முதல், வேலூரில் ஒரு அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டு, 2017–2018–ஆம் கல்வியாண்டு முதல், 5 ஆண்டு சட்டப்படிப்பும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 2017–2018–ஆம் கல்வியாண்டு முதல் 5 ஆண்டு மற்றும்

3 ஆண்டு சட்டப்படிப்புகளுடன் மூன்று அரசு சட்டக் கல்லூரிகள், விழுப்புரம், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் தொடங்கப்பட்டு செயற்பட்டு வருகிறது. செங்கல்பட்டு அரசு சட்டக்கல்லூரியில் 2017–2018 ஆம் கல்வியாண்டு முதல் முதுநிலை சட்டப்படிப்பு தொடங்கப்பட்டுள்ளது.

நீதியரசர் திரு. ப.சண்முகம் விசாரணை ஆணையத்தின் பரிந்துரைக்கேற்ப, சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, உயர்நீதிமன்ற வளாகத்திலிருந்து, காஞ்சிபுரம் மாவட்டம், புதுப்பாக்கம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம், பட்டறைப்பெரும்புதூர் ஆகிய இடங்களில் புதிதாக கட்டப்பட்டுள்ள வளாகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டம், புதுப்பாக்கத்தில் கட்டப்பட்டுள்ள வளாகத்தில் 5 ஆண்டு சட்டப்படிப்பும் திருவள்ளூர் மாவட்டம், பட்டறைப்பெரும்புதூரில் கட்டப்பட்டுள்ள வளாகத்தில் 3 ஆண்டு சட்டப்படிப்பு மற்றும் எல்.எல்.எம் படிப்புகளும் 2018–2019–ஆம் ஆண்டு முதல் நடத்தப்படுகிறது. தற்போது, மாநிலத்தில் பதினோரு அரசு சட்டக் கல்லூரிகள் செயற்பட்டு வருகின்றன.

**2018–2019** ஆவது கல்வியாண்டில் அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட மொத்த மாணவர் இடங்களின் எண்ணிக்கை **10526.** அவற்றில், கல்லூரி வாரியாக ஒப்பளிக்கப்பட்ட மொத்த இடங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன:–

| **வ.எண்** | **சட்டக் கல்லூரியின் பெயர்** | **மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| **1.** | சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரி, பட்டறைப்பெரும்புதூர் (3 ஆண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப்படிப்புகள்) | **1123** |
| **2.** | சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரி, புதுப்பாக்கம் (5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பு) | **1205** |
| **3.** | அரசு சட்டக் கல்லூரி, மதுரை (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | **1438** |

| வ.எண் | சட்டக் கல்லூரியின் பெயர் | மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 4. | அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1440 |
| 5. | அரசு சட்டக் கல்லூரி, கோயமுத்தூர். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1440 |
| 6. | அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1440 |
| 7. | அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1080 |

| வ.எண் | சட்டக் கல்லூரியின் பெயர் | மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 8. | அரசு சட்டக் கல்லூரி, வேலூர் (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை சட்டப் படிப்பு) | 400 |
| 9. | அரசு சட்டக் கல்லூரி, விழுப்புரம் (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை சட்டப் படிப்பு) | 320 |
| 10. | அரசு சட்டக் கல்லூரி, தருமபுரி (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை சட்டப் படிப்பு) | 320 |
| 11. | அரசு சட்டக் கல்லூரி, இராமநாதபுரம் (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை சட்டப் படிப்பு) | 320 |
| **மொத்தம்** | | **10526** |

விழுப்புரம், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய புதிய அரசு சட்டக் கல்லூரிகள் தவிர்த்து ஏனைய எட்டு அரசு சட்டக் கல்லூரிகளும் சொந்தக் கட்டடங்களில் செயற்பட்டு வருகின்றன. விழுப்புரம் அரசு சட்டக்கல்லூரிக்கென சொந்தக் கட்டடம் கட்டும் பணிகளை மேற்கொள்ள ரூ.60.69 கோடி நிதி

ஒப்பளிப்பு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தருமபுரி அரசு சட்டக் கல்லூரிக்கென சொந்தக் கட்டடம் கட்டும் பணிகளை மேற்கொள்ள ரூ.69.29 கோடிக்கு நிருவாக அனுமதியும், 2018–2019–ஆம் நிதியாண்டில் ரூ.15 கோடி நிதி ஒப்பளிப்பும் செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை, மதுரை, கோயமுத்தூர், திருநெல்வேலி மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்களில் செயற்பட்டு வரும் அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு தனித்தனியே விடுதி வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரியில் மாணவியருக்கு மட்டும் விடுதி வசதி செய்து தரப்பட்டுள்ளது. அக்கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு விடுதிக் கட்டடம் கட்டுவதற்கென உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வேலூர் அரசு சட்டக்கல்லூரியில் புதிய மாணவியர் விடுதி கட்டடம் கட்ட ரூ.3.75 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அரசு சட்டக்கல்லூரிகளில் நியமித்திட, 186 உதவிப் பேராசிரியர்களை தேர்வு செய்திடுமாறு ஆசிரியர் தேர்வு வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி 81 உதவிப்

பேராசிரியர்களை அவ்வாரியம் தெரிவு செய்துள்ளது. சென்னை உயர்நீதிமன்ற ஆணையின்படி, ஜம்மு மற்றும் காஷ்மீர் உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி, மாண்புமிகு நீதியரசர் திரு.என்.பால் வசந்தகுமார் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட நிபுணர் குழு மேற்சொன்ன உதவி பேராசிரியர்கள் தேர்வினை முழுவதுமாக கண்காணித்து வருகிறது.

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரி, புதுப்பாக்கம் மற்றும் பட்டறைப்பெரும்புதூருக்கென கூடுதலாக 3 ஆசிரியர் மற்றும் 75 ஆசிரியரல்லா பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

கோயமுத்தூர் அரசு சட்டக் கல்லூரிக்கென புதிய கலையரங்கம் மற்றும் நூலகக் கட்டடம் கட்டும் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.10.16 கோடியும், திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரிக்கென புதிய நூலகக் கட்டடம் கட்டும் பணிகளை மேற்கொள்ள ரூ.3.11 கோடியும், சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி இடமாற்றம் செய்யப்பட்டதால், சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுப்பாக்கம் மற்றும் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, பட்டறைப்பெரும்புதூர் ஆகிய இரு

கல்லூரிகளுக்கு மாற்றம் செய்யப்பட்ட மாணவர்களுக்கு இலவசப் பேருந்து பயண சலுகை அட்டை வழங்குவதற்கென ரூ.1.41 கோடியும், சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுப்பாக்கம் மற்றும் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, பட்டறைப்பெரும்புதூர் ஆகியவற்றின் கலையரங்கத்தில் குளிர்சாதன வசதி ஏற்படுத்தும் பணிகளுக்கென ரூ.1.98 கோடியும், 11 அரசு சட்டக் கல்லூரிகளின் நூலகங்களில் மாணவர்களின் பயன்பாட்டிற்கென சட்டப் புத்தகங்கள், சட்ட இதழ்கள் மற்றும் சட்ட தரவு தளங்கள் வாங்குவதற்கென 11 அரசு சட்டக் கல்லூரிகளின் நூலகங்களுக்கு மொத்தம் ரூ.37.95 இலட்சமும் அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டிருக்கிறது.

2010–2011–ஆம் கல்வியாண்டு முதல் அரசு சட்டக்கல்லூரிகளில் இளநிலை சட்டப்படிப்பு பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது.

2019–ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெற்ற பன்னாட்டு மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக

புதுப்பாக்கத்தில் உள்ள சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியின் சார்பாக 4 மாணவர்களும், பட்டறைப்பெரும்புதூரில் உள்ள சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியின் சார்பாக 3 மாணவர்களும் ஆக மொத்தம் 7 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, அம்மாணவர்களுக்கு தலா ரூ.1,00,000/– வீதம் மொத்தம் ரூ.7,00,000/– நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

அரசு சட்டக்கல்லூரிகளில் தமிழ் மொழி வாயிலாக மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு சட்டப்படிப்புகள் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் தலா ரூ.400/– வீதம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டுவருகிறது.

சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயமுத்தூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக்கல்லூரிகளில் மாணவர்களின் நலனுக்காக புத்தக வங்கி திட்டம் உள்ளது.

## தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

சட்டக் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதன் மூலமாக சட்டம் பயிலும் மாணவர்கள் இன்றைய போட்டிகள் நிறைந்த உலகில் வேரூன்றி நிற்பதற்காக சட்டக் கல்விக்கென தமிழ்நாட்டில், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்

பல்கலைக்கழகம் மாநில சட்டத்தின் மூலம் தோற்றுவிக்கப்பட்டது. மேலும், தெற்காசிய நாடுகளில் சட்டக் கல்விக்கென தோற்றுவிக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகமாக இது திகழ்கின்றது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளையும் தன்னகத்தே ஒருங்கிணைத்து செயற்பட்டு வருவதால் சட்டக் கல்வியின் தரம் மேம்பட்டு வருகிறது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் தற்போது பெருங்குடி, கொட்டிவாக்கம் கிராமத்தில் தரமணி இருப்புப்பாதை நிலையத்திற்கு மிக அருகில் 15 ஏக்கர் நிலத்தில், ரூ.61.74 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. மேலும், இப்பல்கலைக்கழக விரிவாக்க பணிகளுக்காக கூடுதலாக 10 ஏக்கர் நிலம் இப்பல்கலைக்கழகத்திற்கு தமிழ்நாடு அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் 2002–2003 ஆம் கல்வியாண்டிலிருந்து சட்டக்கல்வி பயிற்றுவிக்கும் பணியை, சீர்மிகு சட்டப்பள்ளி வாயிலாக துவக்கி, மூன்றாண்டு எல்.எல்.பி (ஹானர்ஸ்) சட்டப்படிப்பு மற்றும் ஐந்தாண்டு ஒருங்கிணைந்த பி.ஏ., எல்.எல்.பி

(ஹானர்ஸ்), பி.காம்., எல்.எல்.பி (ஹானர்ஸ்), பி.பி.ஏ.,எல்.எல்.பி (ஹானர்ஸ்) மற்றும் பி.சி.ஏ.,எல்.எல்.பி (ஹானர்ஸ்) ஆகிய சட்டப்படிப்புகளை பயிற்றுவித்து வருகிறது. இத்தகைய புதிய சட்டப்படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டதாலும் மற்றும் ஏற்கெனவே பயிற்றுவிக்கப்பட்டு வந்த சட்டப்படிப்புகளில் இருக்கைகள் அதிகரிக்கப்பட்டதாலும், சீர்மிகு சட்டப்பள்ளியில் **2015–2016–**ஆம் கல்வியாண்டிலிருந்து இளநிலை சட்டப்படிப்பு இடங்கள் **320–**இல் இருந்து **780–**ஆக உயர்த்தப்பட்டது. மேலும், இப்பல்கலைக்கழகம் முதுநிலை சட்டப்படிப்பு மற்றும் ஆராய்ச்சி செயல்பாடுகளையும் பயிற்றுவித்து வருகிறது. தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் வாயிலாக பல்வேறு முதுநிலை பட்டயப்படிப்புகள் மற்றும் சான்றிதழ் படிப்புகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**2010–2011–**ஆம் கல்வியாண்டு முதல் சீர்மிகு சட்டப்பள்ளியில் இளநிலை சட்டப்படிப்பு பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது. **2018–** ஆம் ஆண்டு மார்ச் மாதம் வியன்னாவில் நடைபெற்ற சர்வதேச மாதிரி நீதிமன்றப் போட்டியில் கலந்து கொள்வதற்காக, இச்சீர்மிகு சட்டப்பள்ளியில் பயின்று வரும் ஐந்து

மாணவர்களுக்கு தலா ரூ.75,000/– வீதம் நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

அனைத்து வகையிலும் ஒரு முன்னுதாரணமாகத் திகழும் இப்பல்கலைக்கழகம் அதன் சீர்மிகு சட்டப்பள்ளி மூலம் இதுவரை 90 ஆராய்ச்சி மாணவர்களுக்கு சட்ட முனைவர் பட்டத்தினை வழங்கியுள்ளது. தற்போது 47 (முழுநேரம்) மற்றும் 115 (பகுதிநேரம்) மாணவர்கள் முனைவர் ஆராய்ச்சி படிப்பினை இப்பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு வருகின்றனர்.

2018–2019–ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகத்தின் பணியாளர்களின் சம்பளப் பற்றாக்குறை செலவினம் மற்றும் இதர வசதிகளை மேற்கொள்ள ரூபாய் 7 கோடியும் மற்றும் நடப்பு செலவுக்காக ரூபாய் ஒரு கோடியும் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டிருக்கிறது.

பொதுமக்களுக்கு சட்ட அறிவினை ஏற்படுத்துவதற்காக, முறையான உட்கட்டமைப்புடன் கூடிய சட்ட அறிவு செயல் முறை மையம் ஒன்றினை தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் நிறுவியுள்ளது. இது தொடர்பாக தமிழக அரசானது ரூ.30 இலட்சம் நிதி ஒப்பளிப்பு அளித்துள்ளது. குற்றவியல் சட்டப்பாடம் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்ளும்

மாணவர்களின் தேவையை பூர்த்தி செய்யும் வண்ணம் தடயவியல் ஆய்வுக்கூடம் ஒன்றினை தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் நிறுவ தமிழக அரசு ரூ.10 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகம் தேசிய மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்களுடனும், நிறுவனங்களுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்தி, கல்வி, பயிற்சி, சட்டம், நீதி, சமூக முன்னேற்றம் மற்றும் அவற்றோடு தொடர்புடைய பாடங்களில் ஆராய்ச்சி மற்றும் ஆசிரியர்கள், பயிற்சியாளர்கள் பரிவர்த்தனை போன்றவைகளில் மற்ற உயர்கல்வி நிறுவனங்களுக்கு ஒத்துழைப்பு அளிப்பதன் மூலமாக தன்னுடைய செயல்பாடுகளை விரிவாக்கம் செய்கிறது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகம், 2019 – ஆம் ஆண்டு பிப்ரவரி 2–ஆம் தேதி அன்று பெருங்குடி வளாகத்தில் "அனைத்திந்திய செய்தியாளர் (AIR) சட்டக்கல்வி உதவித் தொகுதி" என்ற திட்டத்தை நிறுவியுள்ளது. சட்டமாணவர்களுக்கு சிறந்த சட்டக் கல்விப் பயிற்சியை அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும், இப்பல்கலைக்கழகம் மற்றும் இப்பல்கலைக்கழகத்துடன்

இணைக்கப்பட்டுள்ள சட்டக்கல்லூரிகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர் தங்களது தொழில் தரத்தில் மேன்மை பெற, மாற்றுப் பூசல் தீர்வுமுறையை மேம்படுத்த, சட்டம் சார்ந்த பயிற்சியளித்தல் மற்றும் பிற திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் ஆகியன இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகம்**

தமிழ்நாட்டில் தேசிய அளவிலான மிகச் சிறந்த சட்டக்கல்வி வழங்கும் பொருட்டு **2012**–ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி மாநிலச் சட்டம் மூலம் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி **2018**–ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம் உலகளாவிய காட்சியில் ஏற்பட்டு வரும் சூழ்நிலை மாற்றத்திற்கேற்ப, அதற்கு ஈடுகொடுத்து இணைந்து செல்லும் வகையில், சட்டத்தைக் கற்றல், சட்ட அறிவு பெறுதல், சட்ட வழிமுறைகளை அறிந்து கொள்ளுதல், வழக்காடும் திறமை, நீதி நிருவாகத்தில் திறமையைப் பளிச்சிடச் செய்தல் ஆகியவற்றை சட்டக்கல்வியின் மூலம்

மேம்படுத்திப் பரப்புவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், நவலூர் குட்டப்பட்டு கிராமத்தில் 25 ஏக்கர் வளாகத்தில், 79.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. மேலும், 2015–2016–ஆம் நிதியாண்டில் இப்பல்கலைக்கழகத்திற்கு அறைகலன்கள், விளையாட்டு மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்காக ரூ.7.17 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் ஐந்தாண்டு பி.ஏ.,எல்.எல்.பி (ஹானர்ஸ்), ஐந்தாண்டு பி.காம்., எல்.எல்.பி (ஹானர்ஸ்) மற்றும் எல்.எல்.எம் சட்டப்படிப்புகள் மொத்தம் 121 இடங்களுடன் பயிற்றுவிக்கப்படுகின்றன. மாணவர்கள் சேர்க்கையானது பொதுவான சட்டப்படிப்பு நுழைவுத் தேர்வு (Common Law Admission Test - CLAT) மூலம் நடைபெறுகிறது. இப்பல்கலைக்கழகத்தில் 2018–2019–ஆம் கல்வியாண்டு முதல் சட்ட முதுகலைப்படிப்பு துவக்கப்பட்டிருக்கிறது.

2018–2019–ஆம் கல்வியாண்டில் மேற்சொன்ன சட்டப்படிப்புகளில் சேர்க்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு :–

| வ. எண். | படிப்பு | சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| (1) | பி.ஏ., எல்.எல்.பி (ஹானர்ஸ்) | தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்கள் | 16 |
| | | அகில இந்திய அடிப்படையில் | 35 |
| | | அயல்நாடு வாழ் இந்தியர்கள் | 00 |
| | | **மொத்தம்** | **51** |
| (2) | பி.காம்., எல்.எல்.பி (ஹானர்ஸ்) | தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்கள் | 39 |
| | | அகில இந்திய அடிப்படையில் | 20 |
| | | அயல்நாடு வாழ் இந்தியர்கள் | 00 |
| | | **மொத்தம்** | **59** |
| (3) | எல்.எல்.எம் | தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்கள் | 07 |
| | | அகில இந்திய அடிப்படையில் | 04 |
| | | அயல்நாடு வாழ் இந்தியர்கள் | 00 |
| | | **மொத்தம்** | **11** |
| | | **மாணவர்களின் மொத்த எண்ணிக்கைகள்** | **121** |

இப்பல்கலைக்கழகத்தில் தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்படும் இடங்கள் தமிழ்நாடு மாநில இடஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றி நிரப்பப்படுகின்றன.

2013–2014–ஆம் கல்வியாண்டு முதல், இப்பல்கலைக்கழகத்தில் பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்கவும், மேலும் 2013–2014–ஆம் கல்வியாண்டு முதல் 2017–2018–ஆம் கல்வியாண்டு வரையில், அப்பல்கலைக்கழகத்தில் பயின்ற முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு, அவர்கள் ஏற்கனவே செலுத்தியுள்ள கல்விக்கட்டணத்தை, மீள்ஒப்பளிப்பு செய்தும் ஜனவரி 2018–இல் அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

2018–2019–ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகத்திற்கு தற்காலிக நிதியுதவியாக ரூ.4 கோடி ஒப்பளிக்கப்பட்டிருக்கிறது. மேலும், தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகத்தின் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளுக்கென ரூ.15,70,98,000/– நிருவாக அனுமதி வழங்கி, 2018–2019–ஆம் நிதியாண்டில் முதற்கட்டமாக

ரூ.5,23,66,000/– அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகம் கீழ்க்காணும் பல்கலைக்கழகங்கள் மற்றும் தேசிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது :–

(1) தேசிய சட்டப் பல்கலைக்கழகம், புதுடெல்லி;

(2) இந்திய தேசிய சட்டப்பல்கலைக்கழகம், பெங்களூரு;

(3) இன்ஸ்டிடியூட் ஆப் இந்திய கம்பெனி செகரட்டரீஸ் அமைப்பு, புதுடெல்லி;

(4) இந்திய பன்னாட்டு மக்களாட்சி மற்றும் தேர்தல் மேலாண்மை அமைப்பு, புதுடெல்லி.

மேலும், தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகம் கீழ்க்காணும் கூட்டமைப்புகளில் உறுப்பினராக உள்ளது :–

(1) இந்திய பல்கலைக்கழக கூட்டமைப்பு;

(2) இந்திய சமூக அறிவியல் கழகம்;

(3) சாஸ்திரி இந்தோ–கனடியன் அமைப்பு.

தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகத்தில் **2013–2018** தொகுதியில் பயின்ற மாணவர்களுக்கு முதல் பட்டமளிப்பு விழா **2019–**ஆம் ஆண்டு மார்ச் மாதம் **16–**ஆம் தேதியில் நடைபெற்றது. இவ்விழாவில் பல்கலைக்கழகத்தின் வேந்தரும் சென்னை உயர்நீதிமன்றத்தின் மாண்புமிகு தலைமை நீதிபதியுமான திருமதி.விஜய கமலேஷ் தகில் ரமணி அவர்கள் தலைமை தாங்கி பட்டங்களை வழங்கி உரையாற்றினார்கள்.

தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் என்ற திட்டத்தின் கீழ் "உங்கள் உரிமையைத் தெரிந்து கொள்ளுங்கள் – சட்டம்" என்கிற பகுதியின் கீழ் பின்வரும் **5**-குறும்படங்கள் பொதுமக்களுக்கு சட்ட விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழக மாணவர்களால் தயாரிக்கப்பட்டுள்ளது:-

(i) பணியிடங்களில் வேலை செய்யும் பெண்களுக்கு எதிரான பாலியல் தொந்தரவு குறித்த விழிப்புணர்வு.

(ii) மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலன்.

(iii) தகவல் பெறும் உரிமைச் சட்டம்.

(iv) கைது செய்யப்படும் மற்றும் காவல்துறையின் காவலில் உள்ள நபர்களின் உரிமைகள்

(v) இணையதளக் குற்றம்.

**மாநில சட்ட ஆணையம்**

மாநில சட்ட ஆணையம், தமிழ்நாடு, உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி, மாண்புமிகு நீதியரசர் திரு. சொக்கலிங்கம் நாகப்பன் அவர்கள் தலைமையில், நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கு தற்போதைய நிலைக்கேற்ப திருத்தங்களை / ஆலோசனைகளை பரிந்துரைக்க **15.06.2017** அன்று அரசால் திருத்தியமைக்கப்பட்டது. அவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட மாநில சட்ட ஆணையத்தின் பதவிக் காலம் அதன் தலைவர் பதவியேற்ற, அதாவது **19.06.2017**–ஆம் நாளிலிருந்து மூன்று வருடங்கள் ஆகும். திருத்தியமைக்கப்பட்ட மாநில சட்ட ஆணையத்தில் ஆணையத் தலைவர் தவிர, முழுநேர உறுப்பினர்களும், பகுதிநேர உறுப்பினர்களும் மற்றும் முழுநேர உறுப்பினர்–செயலாளரும் அரசால் நியமிக்கப்பட்டனர்.

மாநில சட்ட ஆணையத்தின் செயற்பணிகளானது ஆங்கிலேய ஆட்சியின் போது இயற்றப்பட்ட ஒவ்வொரு சட்டத்தையும் மற்றும் அதற்குப் பின்பு இயற்றப்பட்ட

சட்டங்களையும் ஆய்வு செய்வதாகும் மற்றும் ஆணையத்தால் ஆய்வு செய்யப்பட்ட அந்தச் சட்டங்கள் இன்றைய சூழ்நிலைக்குப் பொருந்தத்தக்கனவாக உள்ளதா அல்லது இல்லையா என்பது பற்றியும் தனது கருத்தினை அளிக்கும். மேலும், அந்தச் சட்டங்களுக்கு இணங்கிய வகையில் மாற்றமைவுகளை அல்லது திருத்தங்களைச் செய்வதற்கான ஆலோசனையை அரசுக்கு வழங்கும். உச்சநீதிமன்றத்தின் மற்றும் உயர்நீதிமன்றத்தின் பல்வேறு முடிவுகளுடன் மேற்சொன்ன சட்டங்கள் உடன்பட்டிருக்கிறதா என்பது பற்றியும் சட்ட ஆணையம் ஆய்வு செய்யும் மற்றும் அந்தச் சட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்களைப் பற்றியும் அரசுக்கு அறிவுறுத்தும் சட்ட ஆணையம் மேலும்,—

| | |
|---|---|
| (அ) | தற்போதுள்ள சட்டங்களில் உள்ள குறைகளை நீக்குவதற்கு பொருந்தத்தக்க மாற்றமைவுகளை அல்லது திருத்தங்களைச் செய்வதற்கான ஆலோசனையை வழங்கும்; |
| (ஆ) | பொருந்தத்தக்கதாகவுள்ள சமூக, பொருளாதார, சட்ட நடவடிக்கைகள் பற்றிய ஆலோசனையை வழங்கும்; |
| (இ) | மாநிலங்களுக்கிடையேயான உறவுகளை மற்றும் மைய—மாநில உறவுகளுக்கான வழிவகைகள் பற்றிய ஆலோசனையை வழங்கும்; |

| | |
|---|---|
| (ஈ) | நீதி நிருவாக சீர்திருத்தங்கள் அடிப்படையிலான சிறந்த மற்றும் உகந்த நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகளை வழங்கும் மற்றும் பரிந்துரைகளைச் செய்யும்; மற்றும் |
| (உ) | மாநில சட்டங்களுக்கு மட்டுமில்லாமல் மேலும் இந்த மாநிலத்திற்கு பொருந்தும் வகையிலிருக்கும் மையச் சட்டங்களுக்கும் மாற்றமைவுகளை அல்லது திருத்தங்களைச் செய்வதற்கான ஆலோசனையை வழங்கும். |

திருத்தியமைக்கப்பட்ட மாநில சட்ட ஆணையம், பல்வேறு முதன்மை மற்றும் திருத்தச் சட்டங்களை நீக்கறவு செய்ய பரிந்துரைத்து இதுவரை பதினாறு அறிக்கைகளை அரசுக்கு சமர்ப்பித்துள்ளது. மாநில சட்ட ஆணையத்தின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்காக தலைமைச் செயலகத்திலுள்ள உரிய துறைகளோடு கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாநில (சட்ட) ஆட்சிமொழி ஆணையம்**

**1965** ஆம் ஆண்டில் மாநில சட்ட ஆட்சிமொழி ஆணையம், சட்டச் சொற்களை உருவாக்கி சட்டச் சொல் அகராதியை வெளியிடுவதற்காகவும், மையச் சட்டங்களையும், மாநிலச் சட்டங்களையும், அவசரச் சட்டங்களையும் அவற்றின்படி

செய்யப்படும் விதிகள் மற்றும் அறிவிக்கைகள் ஆகிய அனைத்தையும் தமிழில் மொழிபெயர்ப்பதற்காக அமைக்கப்பட்டது.

மாநில சட்ட ஆட்சிமொழி ஆணையம், சட்டத்துறையின் ஒரு பிரிவாக **1992–ஆம்** ஆண்டு சட்டத்துறையுடன் சேர்க்கப்பட்டு, சட்டத்துறை கூடுதல் செயலாளரின் தலைமையின் கீழ் இயங்கி வந்தது. இத்துறையின் கீழ் இயங்கி வந்த மற்றொரு பிரிவான, தமிழ்ப் பிரிவும் சட்ட ஆட்சிமொழிப் பிரிவுடன் இணைக்கப்பட்டு, சட்டத்துறைச் செயலாளரின் ஒட்டுமொத்த மேற்பார்வையிலும் மற்றும் கட்டுப்பாட்டின் கீழும் இயங்கி வந்தது. இது மையச் சட்டங்களையும், சட்டமன்றப் பேரவையில் அறிமுகப் படுத்தப்படும் சட்டமுன்வடிவுகள் மற்றும் அவசரச் சட்டங்கள் உள்ளடங்கலாக மாநில சட்டங்களையும் தமிழில் மொழிபெயர்த்து வந்தது.

தற்போது மாநில சட்ட ஆட்சிமொழி ஆணையம், உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி மாண்புமிகு நீதியரசர் திரு P. கலையரசன் அவர்கள் தலைமையில் மூன்று முழுநேர உறுப்பினர்கள், ஒரு உறுப்பினர் செயலாளர் மற்றும் மூன்று பகுதி நேர உறுப்பினர்களைக் கொண்டு மீண்டும் அமைக்கப்பட்டுள்ளது.

மாநில சட்ட ஆட்சிமொழி ஆணையத்தின் முதன்மை பணிகளானது,–

(i) சட்ட சொற்களுக்கான ஒரு சட்ட சொற்களஞ்சியம் (Law lexicon) தயாரித்து, இறுதி செய்து, அச்சிடுவது;

(ii) மாநில சட்டம், அவசரச் சட்டம் மற்றும் அதன் கீழ் வகுக்கப்பட்ட விதிகளைத் தமிழில் மொழிபெயர்த்தல்

(iii) மத்திய அரசின் சட்டம், அவசரச் சட்டம், அதன் கீழ் வகுக்கப்பட்ட விதிகள், அறிவிக்கைகள் (Notifications) மற்றும் பிற அறிக்கைகளை மொழிபெயர்த்தல்;

(iv) மாநில அரசால் சட்ட ஆட்சிமொழி ஆணையத்திற்கு அவ்வப்போது (From time to time)அளிக்கப்படும் பிற பணிகளைச் செய்தல்

**சான்றுறுதி அலுவலர்கள்**

**1952–**ஆம் ஆண்டு சான்றுறுதி அலுவலர்கள் சட்டத்தின்படி (மையசட்டம் எண் **53/1952)** பொதுவான வணிக நடைமுறையில் முறையாவணங்களைக் குறித்தல் மற்றும் சான்றிடுதல் நோக்கத்திற்காகவும் மற்றும் சான்றுறுதி அலுவலரின் ஏற்பளிக்கப்பட்ட செயல்களுக்காகவும்

சான்றுறுதி அலுவலர் அமர்த்தப்படுவர். **2018–2019** ஆம் ஆண்டில் தமிழக அரசு **1152** வழக்கறிஞர்களை சான்றுறுதி அலுவலர்களாக நியமனம் செய்துள்ளது.

**நீடித்த வளர்ச்சி இலக்கு**

**17** இலக்குகளையும் **169** குறிக்கோள்களையும் கொண்டுள்ள நீடித்த வளர்ச்சி இலக்கானது, கடந்த **2015**–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டில் முன்மொழியப்பட்டு **193** உறுப்பு நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, **01.01.2016** முதல் நடைமுறையில் இருந்து வருகிறது. இந்த நீடித்த வளர்ச்சி, சமூகத்தில் அமைதி, நீதி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்தை உருவாக்க வேண்டிய சூழ்நிலையில் இப்பிரபஞ்சத்தின் பாதுகாப்பை குறிக்கோளாகக் கொண்டுள்ள அதே வேளையில், மக்களுக்காக பொருளாதார வளத்தை எட்டுவதையும் இலக்காகக் கொண்டுள்ளது. மேலும், இத்துறை மேற்கண்ட நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடையப்படுவதற்கு உறுதி செய்வதில் பிறதுறைகளுக்கு சட்ட ஆலோசனை வழங்கி துணை புரிந்து வருகிறது.

இத்துறை, நீடித்த வளர்ச்சி இலக்கில் இதர துறைகளின் சட்ட ரீதியிலான செயல்பாடுகளில் அத்துறைகளுடன் இணைந்து பணியாற்றும். தலைமைச் செயலகத்தில் உள்ள அனைத்து துறைகளுக்கும் சட்ட ஆலோசனை வழங்கும் அமைப்பாக உள்ள இத்துறை, பிற துறைகளால் உருவாக்கப்படும் வளர்ச்சி கொள்கைகள் மற்றும் இதர சட்டங்கள் ஆகியவை, அரசியலமைப்புச் சட்டத்திற்குட்பட்டு அமைவதையும் மேலும் உச்ச நீதிமன்றம் / உயர் நீதிமன்றங்களால் அளிக்கப்பட்டுள்ள இதர தீர்ப்புகளையொட்டியும் உருவாக்கப்படுவதை உறுதி செய்கிறது. மேலும், இத்துறையின் கீழ் இயங்கி வரும் கல்வி நிறுவனங்களில் சட்டம் தொடர்பான கல்வியை வழங்குவதன் வாயிலாக, நீடித்த வளர்ச்சி இலக்கு **16–**ன் (*அமைதி, நீதி மற்றும் வலுவான அரசு நிறுவனங்கள்)* செயலாக்கத்திற்கு உதவி செய்கிறது.

**சி.வி.சண்முகம்,**
**சட்டம், நீதிமன்றங்கள்**
**மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்**

*************